# DEPOSITION OF WITNESS

IN THE COURT OF III ADDITIONAL CITY CIVIL COURT,

CHENNAI-600 104.

O.S.No. 2518 of 2016

Deposition of witness for

DW1

Name : Thiru. Kannan

Father's Name : Thanikachalam

Age : years

Address :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 27th day of February 2026 .

---

27.02.2026

சாட்சி சத்தியபிரமாணம் செய்யப்படார்

**DW 1** வாதி தரப்பில் குறுக்கு விசாரணை –

அருள்மிகு தேவி கருமாரியம்மன் திருக்கோவில் இணை ஆணையர்/செயல் அலுவலர் என்னை இந்த வழக்கில் சாட்சியமளித்திருக்க கொடுத்த அங்கீகார கடிதத்தை பி.த.சா.ஆ.1 –ஆக குறியீடு செய்கிறது. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட விவரங்கள் எனக்கு நேரடியாகவும் தெரியும், ஆவணங்கள் அடிப்படையிலும் தெரியும். இந்த வழக்கில் இணை ஆணையர் தனபால் என்பவர் தான் எதிர்உரை தாக்கல் செய்திருக்கின்றார் என்று சொன்னால் சரிதான். மேற்படி எதிர்உரையில் பத்தி 5–ல் 1–வது பிரதிவாதியின் குடும்ப விவரங்கள் எதுவும் தனக்குத் தெரியாது என்று சொல்லப்பட்டிருக்கின்றது என்று சொன்னால் சரிதான். அதே பதில் உரை பத்தி 6–ல் மேற்படி 1–வது பிரதிவாதி எந்த மாதிரியான மருத்துவ

சிகிச்சை பெற்றுக் கொண்டார் என்ற விவரமும் அவருக்கு தெரியாது என்று சொல்லி இருக்கின்றார் என்று சொன்னால் சரிதான். எங்களுடைய கோவிலில் நல்ல மனநிலையில் இருப்பவர்களும், மனநிலை பாதிக்கப்பட்டவர்களும், உடல்நிலை பாதிக்கப்பட்டவர்களும் இரவு நேரத்தில் வந்து தங்குவார்கள் என்று சொன்னால் சரிதான். வா.த.சா.ஆ.2—ஐ 1—ம் பிரதிவாதி எழுதிக் கொடுத்த பொழுது அவருக்கு வயது 69 என்று சொன்னால் சரிதான். 1—ம் பிரதிவாதி திருக்கோவிலுக்கு அவருடைய சொத்தை தான பத்திரத்தின் மூலமாக எழுதிக் கொடுத்த நேரத்தில் அவர் எங்கு வசிக்கின்றார் என்ற விவரத்தையும் மேற்படி சொத்து அவருடையது தானா என்பது சம்பந்தப்பட்ட விவரத்தையும் தெரிந்து கொண்டோமா என்று சொன்னால் அவர் கோவிலில் உள்ள Quarters —ல் தான் குடியிருந்து வந்தார். வா.த.சா.ஆ.2—ல் சம்பந்தப்பட்ட சொத்தில் யார் யார் குடியிருந்து வருகின்றார்கள் என்பது சம்பந்தப்பட்ட விவரத்தை எதிர்உரையில் சொல்லி இருக்கிறோமா என்றால் இல்லை. 1—ம் பிரதிவாதி சான்றாவணம் இரண்டில் உள்ள சொத்தை கோவிலுக்கு தானமாக வழங்குவதாக சொல்லி கோவில் நிர்வாகத்தை அணுகியபோது அவர் தனக்கு ஆதரவாக யாரும் இல்லை என்றும் கோவிலுக்கு சேவை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டதால் அவரை நாங்கள் எங்களுடைய கோவிலிலேயே தங்க வைத்து விட்டோம் என்று சொன்னால் சரிதான். 1—ம் பிரதிவாதி எந்த தேதியில் யாரிடம் அவருக்கு சொந்தமான வா.த.சா.ஆ.2—ல் குறிப்பிட்டுள்ள சொத்தை கோவிலுக்கு தானமாக கொடுப்பதாக சொன்னார்கள் என்ற விவரத்தை என்னுடைய பதில் உரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான். இந்து சமய அறநிலையத்துறை சட்டப்படி சொத்தை கோவிலுக்கு தானமாக வழங்குபவர்களை Quarters —ல் தங்க வைக்கலாம் என்று விதி உள்ளதா என்று சொன்னால் இல்லை. மேற்படி 1—ம் பிரதிவாதிக்கு வயது ஆகிவிட்ட காரணத்தினாலும் அவருக்கு யாரும் ஆதரவு இல்லை என்று சொன்ன காரணத்தினாலும் அவரை Quarters —ல் தங்க வைத்தோம் என்று சாட்சி கூறுகின்றார். 1—ம் பிரதிவாதியிடமிருந்து வாங்கிவிட வேண்டும் என்பதற்காகவே அவர்களை கோவில் Quarters —ல் தங்க வைத்தோம்

என்றும், அவருக்கு யாரும் ஆதரவு இல்லை என்ற காரணத்திற்காக தங்க வைக்கவில்லை என்று சொன்னால் அது சரியல்ல. 1–ம் பிரதிவாதிக்கு யாரும் ஆதரவில்லை என்று கோவில் Quarters –ல் தங்க வைப்பதற்காக இந்து சமய அறநிலையத்துறையின் ஆணையரிடமிருந்து அனுமதி பெற்றிருக்கின்றோமா என்றால் இல்லை ஆணையருக்கு தகவல் மட்டுமே கொடுத்திருக்கின்றோம். 1–ம் பிரதிவாதி இறக்கும் வரை திருக்கோவில் Quarters –ல் தான் இருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். 1–ம் பிரதிவாதி மனநிலை பாதிக்கப்பட்டவர் என்று அவரை மருத்துவ குழுவினத்தின் பரிசோதனைக்கு அனுப்ப கோரி இடைநிலை மனு எண்.9758/2017 தாக்கல் செய்திருந்தார்கள் என்று சொன்னால் சரிதான். அதற்கு செயல் அலுவலர் வான்மதி என்பவரும் பதில் உரை தாக்கல் செய்திருந்தார் என்று சொன்னால் சரிதான். என்னுடைய வழக்கறிஞரே 1–ம் பிரதிவாதியின் வழக்கறிஞர் என்று சொன்னால் சரிதான்.

Typed to my dictation in my presence and hearing and under my personal dictation and superintendence and interpreted to the Witness in the presence of the accused and admitted and signed by the witness to be correct.

27.02.2026 III Addl. Judge.